## கொடைக்கானல் நகராட்சி

1920ஆம் வருடத்திய தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம், அட்டவணை III-ன் பிரிவு 2-ன் கீழ் 27.06.2024 ஆம் நாள் வியாழக்கிழமை மாலை 4.30 மணிக்கு நகர்மன்றத்தின் அவசரக் கூட்டம் நகர்மன்றக் கூடத்தில் நடைபெறும். அது சமயம் அனைத்து நகர்மன்ற உறுப்பினர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

நகர்மன்றத் தலைவர்,
நாள். 26.06.2024 கொடைக்கானல் நகராட்சி.

**பொருள் எண் – 1)**

மலைகளின் இளவரசி என்று அழைக்கப்படும் கொடைக்கானல் நகராட்சி 21.45 சதுர கிலோமீட்டர் பரப்பளவு கொண்டது. இந்நகரில் 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 36501 ஆகும். கோடை காலங்களில் இந்நகருக்கு தினசரி சராசரியாக 50000-க்கும் மேலான சுற்றுலா வாகனங்கள் வந்து செல்கின்றன. சாதாரண நாட்களில் சராசரியாக 10000-க்கும் மேலான சுற்றுலா வாகனங்கள் இந்நகருக்கு வந்து செல்கின்றனர்.

கோடை காலங்களிலும், சாதாரண நாட்களில் நகரில் வாகன நிறுத்தம் இல்லாத காரணத்தினால் போக்குவரத்து பெரிதும் பாதிக்கப்பட்டு பல மணி நேரம் சுற்றுலா பயணிகளும், பொதுமக்களும் காத்திருக்க வேண்டிய நிலை உருவாகியுள்ளது. வாகன நெரிசல் காரணமாக அவசர கால ஊர்திகள் உரிய நேரத்தில் மருத்துவமனைக்கு சென்றடைவதிலும் காலதாமதம் ஏற்படுகிறது.

இந்நகரினை சுற்றிலும் அதிகமான சுற்றுலா ஸ்தலங்கள் உள்ளதால் கொடைக்கானலுக்கு வரும் சுற்றுலா வாகனங்கள் நிறுத்துவதற்கு போதுமான வாகன நிறுத்தங்கள் இந்நகரில் இல்லை. மேலும், கொடைக்கானல் அண்ணாசாலை பகுதியில் வட்டாட்சியர் அலுவலகம், காவல் துணை கண்காணிப்பாளர் அலுவலகம், காவல் நிலையம், பத்திர பதிவு அலுவலகம் கருவூலகம், வங்கிகள்,தங்கும் விடுதிகள், வணிக கட்டிடங்கள், பிரதான மசூதி அமைந்துள்ளது. தினசரி இச்சாலையினை பயன்படுத்தும் வாகனங்கள் வாகன நிறுத்தம் இல்லாத காரணத்தினால் சாலையிலேயே நான்கு சக்கர வாகனங்கள் மற்றும் இரு சக்கர வாகனங்களை நிறுத்தி சென்று விடுகின்றனர். மேலும் இப்பகுதியில் அமைந்துள்ள அரசு அலுவலகங்கள் மற்றும் வணிக கட்டிடங்கள் வாகன நிறுத்தம் இல்லாத காரணத்தினால் அனைத்து வாகனங்களும் சாலையிலேயே நிறுத்தப்படுகிறது. இதனால் நகரில் தினசரி போக்குவரத்து ஏற்படுவதுடன் வார இறுதி நாட்கள் மற்றும் கோடை காலங்களில் கடுமையாக போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு பொதுமக்கள் மற்றும் சுற்றுலா பயணிகளுக்கு இடையூறாக அமைந்துள்ளது.

இந்நகருக்கு வரும் சுற்றுலா பயணிகளின் பெரும்பாலோரின் கருத்தும் கொடைக்கானல் நகரில் வாகன நிறுத்தம் அமைத்திட வேண்டும் என்பதே.

பேருந்து நிலையம் அமைந்துள்ள உட்வில் சாலையில் சுற்றுலா வாகனங்கள் வாகன நிறுத்தம் இல்லாததால், சாலையிலேயே நிறுத்தி சென்று விடுகின்றனர். இதனால் தினசரி நகரின் மையப்பகுதியில் போக்குவரத்து இடையூறு ஏற்பட்டு பொதுமக்களும், சுற்றுலா பயணிகளும் சிரமத்திற்கு உள்ளாகின்றனர். பேருந்து நிலையத்திற்கு செல்லும் பேருந்துகளும் வெளிவர இயலாமல் பல மணிநேரம் போக்குவரத்தில் நிற்க வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது.

..2..

எனவே, நகரின் மையப்பகுதியில் அரசு நிலங்கள் ஏதும் இல்லாத நிலையில் நகரின் போக்குவரத்து இடையூறினை போக்கும் வகையில், நகரின் மையப்பகுதியில் பேருந்து நிலைய வளாகத்தினை ஒட்டியுள்ள அரசு போக்குவரத்துக் கழகத்திற்குச் சொந்தமான வார்டு-டி, பிளாக் எண்.5, நகரளவு எண்.9/1பி,2/பில் உள்ள 7.00 ஏக்கர் நிலத்தில் 3.62 ஏக்கர் நிலத்தினை நகராட்சியால் பல அடுக்கு வாகன நிறுத்தம் அமைத்திட ஒதுக்கும் பட்சத்தில் நகரின் பெரும்பாலான போக்குவரத்து நெரிசலினை தவிர்த்திட இயலும்.

**இப்பொருள் குறித்து ஏற்கனவே நகர்மன்ற தீர்மானங்கள் 474, நாள்.26.12.2012 மற்றும் 62 நாள். 29.04.2022 ல் தீர்மானங்கள் இயற்றப்பட்டு ஏற்கனவே அரசுக்கு பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மேலும், பழனி சட்டமன்ற உறுப்பினர் அவர்களால் 26.06.2024 அன்று தமிழக சட்டமன்றத்தில் இப்பொருள் குறித்து விவாதிக்கப்பட்டுள்ள நிலையில், கொடைக்கானல் நகரம், வார்டு-டி, பிளாக் எண்.5, நகரளவு எண்.9/1பி, 2/பில் உள்ள 7.00 ஏக்கர் நிலத்தில் 3.62 ஏக்கர் நிலத்தினை, கொடைக்கானல் நகராட்சிக்கு ஆண்டு குத்தகை அடிப்படையிலோ அல்லது வரும் வருவாயில் நகராட்சியும், போக்குவரத்துறையும் 65 : 35 என்ற வீதத்தில் பங்கீட்டு முறையிலோ, நகராட்சிக்கு வழங்கிட கோரி அரசுக்கு கருத்துரு அனுப்பிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.** (கோப்பு ந.க.எண். 8813/2012/எப்.1)

அலுவலக குறிப்பு. 1) அனுமதிக்கலாம்.
2) மாவட்ட ஆட்சித் தலைவர், திண்டுக்கல் அவர்களின் வழியாக நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் வழியாக அரசு கூடுதல் தலைமை செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மற்றும் அரசு முதன்மை செயலாளர், போக்குவரத்துத் துறை அவர்களுக்கு கருத்துருவினை சமர்ப்பிக்க அனுமதியக்கலாம்.

| | |
|---|---|
| **நகர்மன்றத் தீர்மானம் எண் / நாள் :** | **801, நாள். 27.06.2024** |
| | |
| **நகர்மன்றத் தீர்மானம்** : | அனுமதிக்கப்பட்டது. |

**பொருள் எண்** – 2)

கொடைக்கானல் நகர் பகுதிக்கு, வனப்பகுதியான கீழ்குண்டாறு பகுதியில் இருந்து மின் மோட்டார்கள் மூலம் குடிநீர் உந்தப்பட்டு நகர் பகுதிக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. காற்று மழையின் காரணமாக அடிக்கடி சீரான மின்சாரம் கிடைக்காத நிலையில் அடிக்கடி மோட்டார் பழுதடைந்துவிடுவதுடன் குடிநீர் விநியோகமும் பாதிக்கப்படுகிறது. இதனால் நகர் பகுதியில் அடிக்கடி குடிநீர் விநியோகம் செய்ய இயலாமல் குடிநீர் தட்டுப்பாடு ஏற்பட்டு வருகிறது. மேலும் கீழ்குண்டாறு பகுதியான வனப்பகுதியில் இருப்பதினால் மழைக்காலங்களில் மரங்கள் அதிகளவில் மின் வயரில் விழுந்து மின்சாரம் துண்டிக்கப்படுகிறது. இரவு நேரங்களில் வனவிலங்குகள் நடமாட்டத்தினால் உடனுக்குடன் மின்தடை சரி செய்திட இயலாத நிலையில் உள்ளதாலும் கீழ்குண்டாறு குடிநீர் திட்டத்திற்கு புதியதாக 400 KVA ஜெனரேட்டர் குடிநீர் நிதியின் மூலம் வாங்கிக் கொள்ளவும், அரசு நிதி ஒதுக்கீடு செய்யும் பட்சத்தில் இத்தொகையினை ஈடு செய்து கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. இதற்காகும் உத்தேச செலவுத் தொகை ரூ. 49.80 இலட்சம் ஆகும்.

அலுவலக குறிப்பு. 1) அனுமதிக்கலாம்.

2) குடிநீர் தேவையின் அவசர அவசியம் கருதி குடிநீர் நிதியின் மூலம் வாங்கிக் கொள்ளவும் அரசு நிதி பெறும்பட்சத்தில் இத்தொகையினை குடிநீர் நிதிக்கு ஈடு செய்து கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர்மன்றத் தீர்மானம் எண் / நாள் :** | **802, நாள். 27.06.2024** |
| | |
| **நகர்மன்றத் தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

ஒம்/-பா.செல்லத்துரை,
நகர்மன்றத் தலைவர்,
கொடைக்கானல் நகராட்சி.

/ உண்மை நகல் /

ஆணையாளர்,
கொடைக்கானல் நகராட்சி.